**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 573** **நாள்: 14.10.2026**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தேர்தல் கல்வி மன்றத்தினை (Electoral Literacy Club) செயல்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தேர்தல் கல்வி மன்றத்தினை (Electoral Literacy Club) செயல்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் தொடர்பாக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாணவர்களுடனான கலந்துரையாடல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், இன்று (14.10.2026) ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள், கடந்த தேர்தலின்போது, மாற்றுத்திறனாளிகள் சக்கர நாற்காலிகளில் சென்று தங்கள் வாக்கினை பதிவு செய்வதற்காக சிறப்பாக தங்கள் பங்கினை ஆற்றிய சென்னை பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரிகளில் உள்ள 920 நாட்டு நலப்பணித்\ திட்ட மாணவர்கள் மற்றும் 16 நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், தேர்தல் விழிப்புணர்வு மற்றும் அரசியலமைப்புச் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை, வாக்காளர் பட்டியல் மற்றும் படிவங்கள், தேர்தல் உரிமை அதில் இளைஞர்களின் பங்கு, ஜனநாயக விழிப்புணர்வு குறித்தும், இணையதளம் மூலமாக புதிதாக வாக்காளர்களை சேர்த்தல், இதுகுறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்தும் மாணவர்களுக்கு விளக்கினார்.

இந்த கலந்துரையாடலில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்களுக்கு சட்டக் கட்டமைப்பு, தேர்தல் செயல்பாட்டில் அதன் பங்கு மற்றும் அதனை திறம்பட செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட PPT செயல் விளக்கக் காட்சி மூலம் விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், விரிவாக விளக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / இணை ஆணையர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி என். பூஷ்ணாதேவி, தேர்தல் கல்வி மன்ற ஒருங்கிணைப்பாளர்/வாக்காளர் பதிவு அலுவலர் திரு.இ.முருகானந்தம், கல்வி அலுவலர் திருமதி ஜெ.வசந்தி, மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் (மாநில குழுமம்) திரு.பி.நா.குணாநிதி மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள்தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**